முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.01.2022**, வியாழக்கிழமை

1. கருணை வடிவான ஞான குருவே
காக்கும் பலமாக வந்த தவமே
தருமபலம் கொண்டு அருளுகின்ற
தவராசனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ கலை திங்கள்
வரங்களென சப்தம திகதி குருவாரம்
(பிலவ வருடம் தை மாதம் 7ம் நாள், 20.01.2022 வியாழக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை நம்மாழ்வார் யானும்
அருளுவேன் உலக நலம்பெற
வாசி வென்ற ஞானிகள் படை
வையகம்தனை காத்து வர
4. வருகின்ற இந்த மகத்துவத்தை
வாழும் மக்கள் அறிந்துணரா
தரும வழிகளை ஏற்று வரா
தன் பலமே எல்லாமென கர்வம்
5. கர்வம் கொண்டு நடத்திட்டால்
கலியின் வேகமான பேரிடர்
கர்வம்தனை அழிக்கும் முகமாக
காணக் கூடும் உலகில் அவலங்கள்
6. அவலங்கள் பேராசையின் வழி
ஆபத்தும் பெருகி ஆளுமைக்கும்
அவலங்கள் பின்னடைவு காணக்கூடும்
அவசியம் உலகை பாதுகாக்கின்ற
7. காக்கின்ற ஆன்மீக ஞான வழிகளை
கடவுள் நெறிகட்கு உண்டானவழிகளை
தேக்காமல் நடக்க வகை செய்து
தொடர்ந்தாலே போதும் உலகம் தானும்
8. உலகம் தானும் பாதுகாப்புப்பெருகி
உண்மையான மக்கள் சமூகம்
பலமான தயவான சக்தி கொண்ட
பயபக்தி நிறைந்த ஞானவான்கள் ஆக
9. ஆகவே உலகம் நிரம்பி
ஆளுமைகளும் திடவழி கண்டு
வகைபட இயற்கை பாதுகாப்புடன்
வளர்ச்சித் திட்டங்களும் கண்டு

10. கண்டுமே மக்கள் தேவைகள்
கட்டாயம் பூர்த்தி செய்யும்படி
தொண்டுகள் பெருகி இனிதே
தெய்வீக ஆட்சியாக மாறும்

11. மாறுதல் தரும் அரங்க ஞானி
மாதவசியை கண்டு வணங்கிட
ஆறுதல்பட உலகே மாற்றம் பெறும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–